ஜோலார்பேட்டை நகராட்சி
சாதாரண கூட்டம்

2022–ஆம் ஆண்டு ஜீலை மாதம் 14ஆம் தேதி (**14.07.2022**) வியாழக் கிழமை காலை 10.30 மணிக்கு ஜோலார்பேட்டை நகராட்சி அலுவலக நகரமன்றக் கூடத்தில் நடைபெறும் நகரமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

நகரமன்ற தலைவர்
ஜோலார்பேட்டை நகராட்சி

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்"
(பயன் நிறைந்த மொழிகளில் வல்ல சான்றோரின் பெருமையை, உலகத்தில் அழியாமல் விளங்கும் அவர்களுடை மறைமொழிகளே காட்டிவிடும்)

பொருள்கள்

1) **கீழ் குறிப்பிட்ட நகராட்சி அலுவலர்களின் நாட்குறிப்புகளை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.**
அ) ஜோலார்பேட்டை நகராட்சி ஆணையாளர் அவர்களின் மே மற்றும் ஜீன் 2022ம் மாதத்தின்நாட்குறிப்புகள்.
ஆ) ஜோலார்பேட்டை நகராட்சி பொறியாளர் அவர்களின் மே மற்றும் ஜீன் 2022ம் மாதத்தின்நாட்குறிப்புகள்.

2) ஜோலார்பேட்டை நகராட்சியின் ஜீன்–2022 மாதத்திற்கான வரவு செலவு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

நகராட்சியின் வரவு தொகை ரூ.		
வ.எண்	நிதி விவரம்	ஜீன்–2022
1	பிறப்பு இறப்பு சான்று	200.00
2	வரி மற்றும் வரியில்லா இனம்	15,19,931.00
3	இதர வரவு	3,75,330.00
	மொத்தம்	**18,95,461.00**
நகராட்சியின் செலவு		
வ.எண்	நிதி விவரம்	ஜீன்–2022
1	பணியாளர் ஊதியம்	17,500.00
2	நிர்வாக செலவினங்கள்	1,08,028.00
3	பராமரிப்பு மற்றம் இயக்கம்	42,95,652..00
4	திட்டம்	1,39,729.00
5	நிர்வாக பங்குத் தொகை	88,424.00
	மொத்தம்	**46,49,333.00**

அலுவலக குறிப்பு
மன்றம் பதிவு செய்யலாம்

3) ஜோலார்பேட்டை நகராட்சியில் ஜீன் 2022ஆம் மாதத்தில் பிறப்பு 0 மற்றும் இறப்பு 10 ஆகும்

அலுவலக குறிப்பு
மன்றம் பதிவு செய்யலாம்.

4) ஜோலார்பேட்டை நகராட்சியின் இரயில்வே ஐங்சன், கோடியூர், அரசு மருத்துவமனை, கடைத்தெரு, பார்சம் பேட்டை (ம) ஸ்டேடியம் இடங்களில் 150 வாட்ஸ் எல்.இ.டி உயர்கோபுர மின்விளக்குகள் உள்ளன. இதில் பல பகுதிகளில் மின்விளக்குகள் சரிவர ஏரிவதில்லை. பொதுமக்கள் நலன்கருதி எரியாக மின்விளக்குகளை புதியதாக அமைக்கவும் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதி 2022-2023ஆம் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்

ந.க.எண்.2823 /2022 /இ1

5) ஜோலார்பேட்டை நகராட்சியின் **2020-21**ம் ஆண்டு தணிக்கை முடிந்த நிலையில் தணிக்கை அறிக்கைகள் 6 நகல்கள் ஜெராக்ஸ் எடுக்கவும் மற்றும் தணிகை அறிக்கைகள் பைன்டிங் செய்து புத்தக வடிவில் தயார் செய்யவும் ஆகும் செலவு தொகை ரூ.8000/க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. மேலும் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிகளை G.V.ஜெராக்ஸ், ஜோலார்பேட்டை என்ற நிறுவனம் மூலம் செய்து முடித்தமைக்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

மன்றம் அனுமதிக்கலாம்.

6) ஜோலார்பேட்டை நகராட்சியின் **2020 21ம்** ஆண்டு கணக்குகள் வருவாய் நிதி மற்றும் குடிநீர் நிதி கணக்குகள் திரு.ஜி.கிருஷ்ணமுர்த்தி தருமபுரி என்ற தனியார் கல்சல்டன்ட் மூலம் தயார் செய்து தணிக்கை சமர்ப்பித்த வகைக்கான கன்சல்டன்ட் தொகை ரூ.40.000/ மேற்கண்ட நபருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2. தணிக்கை பணியின் அவசர அவசியம் கருதி மன்ற முன் அனுமதி பெற்று பணி செய்து தொகை வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

ந.க.எண்.271/2021/சி1

7) தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ODF+ மற்றும் GFC Star Rating பெற தரச்சான்று பெறுவது தொடர்பாக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.2436/2021/A3 நாள்.17.03.2022 தேதிய கடிதத்தில், தூய்மை இந்தியா திட்டத்தில், தமிழகத்தில் உள்ள அனைத்து நகராட்சிகளிலும் ODF+ மற்றும் GFC Star Rating பெற நகராட்சியின் புதியதாக செய்யப்பட்ட வார்டு மறுவரையறை வரைப்படம் "CADD" மற்றும் KML வடிவில் தயாரிக்கும் பணிக்கு தனிநபர்/நிறுவனம் மூலம் மேற்கொள்ளவும், மேற்படி பணியினை தனியார் நிறுவனம் மூலம் விலைப்புள்ளி பெற்று CADD மற்றும் KML வரைப்படம் தயாரிக்க ஆகும் தோராய செலவினம் ரூ.25000/- க்கு நகரமன்ற தீர்மான எண்.13 நாள்.11.04.2022ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி பணியினை CADD மற்றும் KML வரைப்படம் தயாரிக்க 08.04.2022ல் விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளின் விவரம் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

வ.எண்	விலைப்புள்ளி வழங்கியவரின் விவரம்	CADD மற்றும் KML வடிவில் தயாரிக்கும் பணிக்கான தொகை விவரம்	CADD மற்றும் KML வரைப்படம் தயாரிக்க கொடுக்க தொகை ரூ.
1	ABC Engineering, Engineering, Construction & Contractors, Tirupattur	ஒரு வார்டிற்கு ரூ.1390/- 18x1390=25,020	ரூ.25,020/-
2	Kumar Builders, Engineer's & Constractor's, Jolarpet	ஒரு வார்டிற்கு ரூ.1385/- 18x1385=24,930	ரூ.24,930/-
3	Sri NHK Design and Construction, Tirupattur	ஒரு வார்டிற்கு ரூ.1375/- 18x1375=24,750	ரூ.24,750/-

அலுவலக குறிப்பு

1. மேற்படி விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள வ.எண்.3ன் Sri NHK Design and Construction, Tirupattur என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்கும் மற்றும் பணிக்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1586/2022/எச்1

8) ஜோலார்பேட்டை நகராட்சி, திருப்பத்தூர் ஒருங்கிணைந்து நீதிமன்றத்தில் இந்நகராட்சி மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள் மற்றும் நகராட்சிக்கு எதிராக தாக்கல் செய்யபட்டுள்ள அனைத்து வழக்குகளுக்கும் நகராட்சி சார்பாக ஆஜராகி வாதிடும் நகரமன்ற வழக்கறிஞர் (Standing Council) திரு.D.மணி அவர்ளுக்கு வழக்கு கட்டணமாக வழங்க 2022-2023 ஆம் ஆண்டிற்கான தோராய செலவினம் ரூ.50,000/-க்கு (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகு குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2403/2022/எப்1

9) ஜோலார்பேட்டை நகராட்சி, சக்கரகுப்பம் கிராம சர்வே எண்.63ல் உள்ள ஆக்கிரமணத்தை அகற்றுவது தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No.18482/2011 மற்றும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண். W.P.No.14027/2022ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை நாள் 3.2.2022ல் 12 வார காலத்திற்குள் மனுதாரர் முன்னிலையில் புலத் தணிக்கை செய்து அறிக்கை சமர்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No.18482/2011 மற்றும் W.P.No.14027/2022 ஆகிய இரண்டு வழக்கு குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பத்தூர் அவர்கள் நடத்திய ஆய்வு கூட்டத்தில் வழக்கிற்குட்பட்ட சக்கரகுப்பம் கிராம எண்.63, குடியானகுப்பம் கிராம சர்வே எண்.335/1, ஜோலார்பேட்டை கிராம சர்வே எண்.63/1 ஆகிய இடங்களை வருவாய்துறையை சார்ந்த நில அளவையர்களை கொண்டு 19.05.2022 அன்று புலத் தணிக்கை மேற்கொண்டு எல்லை நிர்ணயம் செய்து கற்கள் பதிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

அதன்பேரில் நாட்றம்பள்ளி மற்றும் திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலக நில அளவையர்கள் 19.05.2022 அன்று மேற்படி வழக்கிற்குட்பட்ட சக்கரகுப்பம் கிராம எண்.63, குடியானகுப்பம் கிராம சர்வே எண்.335/1,
ஜோலார்பேட்டை கிராம சர்வே எண்.63/1 ஆகிய இடங்களை புலத் தணிக்கை செய்து எல்லை நிர்ணயம் செய்யப்பட்டு கற்கள் பதிக்கப்பட்டது. மேற்படி எல்லை கற்கள் பதிக்கப்பட்டதற்கான தோராய செலவினம் ரூ.3485/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்படி மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்திரவின்படியும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் வழக்கு தொடர்பான ஆய்வுகூட்டத்தில் தெரிவித்து அறிவுரையின்படியும், மேற்படி பணிகள் உடனே மேற்கொள்ளப்பட வேண்டுமென தெரிவித்ததின்பேரில் விலைப்புள்ளிகள் பெற்று பணிகள் மேற்கொள்ள போதிய நேரம் இல்லாத காரணத்தினால் கீழ்கண்ட விவரப்படி உள்ளூரில் கற்கள் வாங்கப்பட்டு எல்லை கற்கள் பதிக்கப்பட்டது விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

வ.எண்	பொருட்கள் வாங்கப்பட்ட விவரம்	விலை
1	K.தருமன், கிருஷ்ணகிரி மெயின் ரோடு, திருப்பத்தூர் அவர்களிடமிருந்து 35 கற்கள் வாங்கப்பட்டது. (35x85=2250)	2975
2	மோகன் பெயிண்ட்ஸ & ஹார்டுவேர்ஸ், ஜோலார்பேட்டை	510
	மொத்தம்	3485

அலுவலகு குறிப்பு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. உள்ளூரில் கற்கள் வாங்கப்பட்டு உடன் பணிகள் முடிக்கப்பட்டதற்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.
3. மேற்படி செலவினத்தை வருவாய் நிதிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2255/2022/எப்1

10) ஜோலார்பேட்டை நகராட்சியின் 18 வார்டுகள் உள்ளன. இதில் உள்ள மொத்த தெருவிளக்குகள் 1598 எண்கள் பயன்பாட்டில் உள்ளது. அனைத்து வார்டுகளிலும் பொதுமக்களின் நலனை கருதி ஏற்கெனவே உள்ள தெருவிளக்குகளை LED தெருவிளக்குகளாக புதியதாக மாற்றி அமைக்க ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதி 2022-2023ஆம் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்

ந.க.எண்.2824 /2022 /இ1

11) ஜோலார்பேட்டை நகராட்சியின் நகரமன்ற தலைவரின் ஈப்பு வாகனம் எண். TN23 BM4493 பழுதடைந்து உள்ளதை பராமரிப்பு மற்றும் சிறு பழுதுநீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.30.000/க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதி 2022-2023ஆம் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்

ந.க.எண்.2829 /2022 /இ1

12) ஜோலார்பேட்டை நகராட்சியின் 18 வார்டுகளில் உள்ள தார் சாலைகளில் குடிநீர் குழாய் பதிக்கும் பணியின் போதும் அதிக மழையின் காரணமாகவும் ஏற்பட்ட பழுதடைந்துள்ளன இந்த தார் சாலைகளில் பேட்ச் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதி 2022-2023ஆம் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்

ந.க.எண்.2827 /2022 /இ1

13) ஜோலார்பேட்டை நகராட்சியின் காவல் நிலைய சாலை முதல் முனிசாமி தெருவரை உள்ள குடிநீர் பைப்லைன்கள் நெடுஞ்சாலை விரிவாக்க பணிகளால் சாலையின் இருபுறமும் பல இடங்களில் பைப்லைன்கள் முழுவதுமாகவும் பழுதடைந்து உள்ளது. இதனால் பொதுமக்களுக்கு குடிநீர் வினியோகம் செய்ய முடியவில்லை எனவே, பழுதடைந்த குடிநீர் குழாயினை புதியதாக மாற்றி அமைக்கும் பணிக்கு ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதி 2022-2023ஆம் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்

ந.க.எண். 2825/2022 /இ1

14) ஜோலார்பேட்டை நகராட்சியின் 18 வார்டுகளில் உள்ள சிமெண்ட் சாலைகள் குடிநீர் குழாய் பதிக்கும் பணியின் போதும் அதிக மழையின் காரணமாகவும் ஏற்பட்ட பழுதடைந்துள்ளன இந்த சிமெண்ட் சாலைகளில் பேட்ச் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதி 2022-2023ஆம் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்

ந.க.எண்.2826 /2022 /இ1

15) ஜோலார்பேட்டை நகராட்சியின் 18 வார்டுகளில் உள்ள சிறுமின்விசை பம்புகளின் பழுதடைந்த குடிநீர் தொட்டியின் மேடைகள் சரிசெய்யும் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதி 2022-2023ஆம் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்

ந.க.எண்.2828 /2022 /இ1

16) ஜோலார்பேட்டை நகராட்சியின் அம்பலூர் தலைமை நீரேற்று நிலையத்தில் பயன்படுத்தப்பட்டு வந்த கீழ்கண்ட மின்மோட்டார்கள் மற்றும் பதிலி மோட்டார்கள் (Stand by Motors) உயர்மின் அழுத்தம் காரணமாக மின்மோட்டாரின் காயில் எரிந்து விட்ட காரணத்தினால் மேற்படி மின்மோட்டாரின் காயில் கட்டும் பணியினை மேற்கொள்ள 27.05.2022 அன்று விலைப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார்செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

வ.எண்.	பணியின் விவரம்	ஒப்பந்ததாரர் பெயர்
1.	இந்நகராட்சியின் அம்பலூர் தலைமை நீரேற்று நிலையத்தில் பயன்படுத்தப்பட்டு வந்த 50 எச்.பி திறன் கொண்ட மின்மோட்டார்கள் காயில் கட்டுதல் இதர பாகங்கள் பழுது நீக்கம் செய்யும் பணி	எம்.சி.கே.பிளம்பிங், ஜோலார்பேட்டை ரூ.49,900/-
		ஸ்ரீசெல்வா ரீவைண்டிங் ஒர்க்ஸ்,திருப்பத்தூர் ரூ.50,300/-
		சந்தியா ரீவைண்டிங்ஒர்க்ஸ்,ஜோலார்பேட்டை ரூ.50,500/-
2	இந்நகராட்சியின் அம்பலூர் தலைமை நீரேற்று நிலையத்தில் பயன்படுத்தப்பட்டு வந்த 60 எச்.பி திறன் கொண்ட மின்மோட்டார்கள் காயில் கட்டுதல் இதர பாகங்கள் பழுது நீக்கம் செய்யும் பணி	சந்தியா ரீவைண்டிங்ஒர்க்ஸ்,ஜோலார்பேட்டை ரூ.49,300/-
		ஸ்ரீசெல்வா ரீவைண்டிங் ஒர்க்ஸ்,திருப்பத்தூர் ரூ.49,400/-
		எம்.சி.கே.பிளம்பிங், ஜோலார்பேட்டை ரூ.48,900/-
3	இந்நகராட்சியின் அம்பலூர் தலைமை நீரேற்று நிலையத்தில் பயன்படுத்தப்பட்டு வந்த 50 எச்.பி திறன் கொண்ட மின்மோட்டார்கள் காயில் கட்டுதல் இதர பாகங்கள் பழுது நீக்கம் செய்யும் பணி	ஸ்ரீசெல்வா ரீவைண்டிங் ஒர்க்ஸ்,திருப்பத்தூர் ரூ.48,700/-
		எம்.சி.கே.பிளம்பிங், ஜோலார்பேட்டை ரூ.46,900/-
		சந்தியா ரீவைண்டிங்ஒர்க்ஸ்,ஜோலார்பேட்டை ரூ.49,500/-

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. 27.05.2022 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண்.1,2,3ல் குறைவான விலைவிகிதத்தில் வழங்கியுள்ள எம்.சி.கே.பிளம்பிங், ஜோலார்பேட்டை விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. பணியின் அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்.2165/2022/இ1

17) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20789/2021/UPA1 நாள்.16.06.2022 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1966/2022/அ நாள்.17.06.2022 ஆகியோரின் கடித்தில் நகர்ப்புற சாலையோர வியாபாரிகள் (பாதுகப்பு மற்றும் வாழ்வாதார மற்றும் சாலையோர வியாபாரத்தை ஒழுங்குபடுத்தும்) விதிகள் 2015ன் படி அறிவிக்கப்பட்ட சட்டப்பேரவை அறிவிப்பு தொடர்பாக 2022-2023ம் ஆண்டுக்கான புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு அடையாள அட்டை வழங்கப்பட்டு அவர்கள் எவ்வித சிரமமும் இன்றி வியாபாரம் செய்வதற்கு ஏற்ற சூழல் உருவாக்கப்பட்டும், தகுதியான வியாபார பகுதியினை கண்டறிந்து பாதுகாப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வியாபாரம் செய்து வரும் சாலையோர வியாபாரிகளை 2022-2023 ஆம் ஆண்டிற்கு புதியதாக கணக்கெடுப்பு நடத்தவும், அவர்களக்கு சான்றிதழ் மற்றும் Biometic and QR/ Bar Code டன் கூடிய அடையாள அட்டை (Smart Card) வழங்கும் பணி மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலவலக குறிப்பு</u>

1. மன்ற அனுமதி வழங்கலாம்.
2. ஒப்பந்தப்புள்ளி விவரம் செய்தித் தாளில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு உண்டாகும் செலவினத் தொகையினை வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனமதிக்கலாம்.

நகரமன்ற தலைவர்
ஜோலார்பேட்டை நகராட்சி

ஜோலார்பேட்டை நகராட்சி

சாதாரண கூட்டம்

2022ம் ஆண்டு ஜீலை மாதம் 14.07.2022ம் தேதி வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு ஜோலார்பேட்டை நகராட்சி அலுவலக நகரமன்ற கூடத்தில் நடத்தப்பட்ட சாதாரண தீர்மானங்கள்.

வ. எண்	பொருள் எண்	தீர்மான எண்	தீர்மானம்
1	1	60	பதிவு செய்யப்பட்டது.
2	2	61	மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.
3	3	62	அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.
4	4	63	அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.
5	5	64	அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.
6	6	65	அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.
7	7	66	அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.
8	8	67	அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.
9	9	68	அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.
10	10	69	அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.
11	11	70	அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.
12	12	71	அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.
13	13	72	அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.
14	14	73	அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.
15	15	74	அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.
16	16	75	அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.
17	17	76	அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(ஓம்) மா.காவியா
நகரமன்ற தலைவர்
ஜோலார்பேட்டை நகராட்சி

/உண்மை நகல்/

நகராட்சி ஆணையாளர்
ஜோலார்பேட்டை நகராட்சி